Puducherry

Regional Bulletin

26.3.2024 18.10hrs

வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 26.3.2024 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

21 மாநிலங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில், அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ள முதல்கட்ட மக்களவைத் தேர்தலுக்கு, இன்றும் வேட்பாளர்கள் பலர் விறுவிறுப்பாக வேட்புமனு தாக்கல் செய்தனர்.

நாட்டில், வெப்ப அலை தீவிரமாகலாம் என எதிர்பார்க்கப் படுவதை ஒட்டி, தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது.

வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதை முதல் கடமையாக கருத வேண்டும் என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ கூறியுள்ளார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில், 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் இன்று தொடங்கி உள்ளன.

*மனுதாக்கல் -1 (18)*

தமிழ்நாடு – புதுச்சேரி உட்பட, 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில், அடுத்த மாதம் 19ஆம் தேதி

நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை முடிவடையும் நிலையில், இன்று வேட்பாளர்கள் பலரும் விறுவிறுப்பாக மனுதாக்கல் செய்தனர். மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. கிரண் ரிஜிஜூ, அருணாச்சலப் பிரதேசத்தின் அருணாச்சல் – மேற்கு மக்களவைத் தொகுதியிலும், மற்றொரு மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. சர்பானந்த சோனோவால், அஸ்ஸாமின் திப்ரூகர் மக்களவைத் தொகுதியிலும், இன்று மனுதாக்கல் செய்தனர். தமிழகத்தின் தூத்துக்குடி தொகுதியில், திமுக வேட்பாளர் திருமதி. கனிமொழி வேட்புமனு தாக்கல் செய்தார். மாநிலத்தின் 39 மக்களவைத் தொகுதிகளில் நேற்று வரை 405 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்த நிலையில், இன்று இந்த எண்ணிக்கை 483 ஆக அதிகரித்துள்ளது.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில், பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் திரு. அலங்கார வேலு மற்றும் 7 சுயேட்சை வேட்பாளர்கள் இன்று வேட்பு மனு தாக்கல் செய்தனர். திரு. மணிகண்டன், திரு. கிஷோர் குமார், திரு. கிருஷ்ண மூர்த்தி, திரு. அருணாச்சலம், திருமதி. நிர்மலா, திரு. கொளஞ்சியப்பன், திரு. ராமதாஸ் ஆகியோர் இதில் அடங்குவர்.

*மனுதாக்கல் -2 (8)*

தமிழ்நாடு – புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் முதல்கட்ட மக்களவைத் தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் நாளை வரை தாக்கலாகும் வேட்பு மனுக்கள், நாளை மறுநாள் 28ஆம் தேதி, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கப்பட்ட மனுக்களை திரும்பப் பெற, வரும் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

ஆயினும், பீகார் மாநிலம் கயா, நவாடா, ஔரங்காபாத், ஜமுயி மக்களவைத் தொகுதிகளில், அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கு, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய நாளை மறுநாள் கடைசி நாளாக இருக்கும்.

*ஆணையம் அறிவுறுத்தல் (16)*

நடப்பு மார்ச் மாதம் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில், வெப்ப அலை தீவிரமாகலாம் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்து இருப்பதை கருத்தில் கொண்டு, தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது. கோடைக் காலத்தில், வெயிலின் தாக்கத்தை சமாளிக்க, எதையெல்லாம் செய்யலாம்-செய்யக்கூடாது என்பது குறித்து, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்களையும், தேர்தல் ஆணையம் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளது. அனைத்து வாக்குச் சாவடிகளிலும் நிழல் பந்தல், குடிநீர் உட்பட, வெயிலை சமாளிக்கத் தேவையான குறைந்த பட்ச வசதிகள் இடம் பெறுவதை தலைமைத் தேர்தல் அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. வெயில் காலத்தில் குறிப்பாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, வெப்பம் அதிகம் உள்ள நேரத்தில், தேவையின்றி வெளியே செல்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் ஏற்கனவே அறிவுறுத்தி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

தேர்தல் ஆணையம் சி-விஜில் மொபைல் செயலி மூலம் தேர்தல் நடைமுறைகளை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் மற்றும் செலவின விதிமுறைகளின் மீறல்களை, பொதுமக்கள் படம் பிடித்து தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பினால், நடவடிக்கை எடுக்கும் வகையில், இந்த மொபைல் செயலி வடிவமைக்கப் பட்டுள்ளது. தேர்தல் அதிகாரிகளை நேரில் அணுகத் தேவையின்றி பொதுமக்கள் இந்த செயலி மூலம் தங்களின் புகார்களை எளிதாகத் தாக்கல் செய்யலாம் என்றும், புகார் பதிவு செய்த 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. புகாரின் நடப்பு நிலை குறித்து, உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வசதியும் இந்த செயலியில் இடம் பெற்றுள்ளது.

*தமிழ்நாடு தேர்தல் (16)*

வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதை முதல் கடமையாக கருத வேண்டும் என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ கூறியுள்ளார். சென்னையில் இன்று நடைபெற்ற மாவட்ட செய்தியாளர்களுக்கான பயிலரங்கில் அவர் பேசுகையில், கிராமங்கள் அளவிற்கு நகர்ப்புறங்களில் வாக்குப் பதிவு இருப்பது இல்லை என்றும், நகர்ப்புற மக்கள் சிரமம் பாராமல் வாக்களிப்பது அவசியம் என்றும் கூறினார். வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்த விளக்கக் கையேடுகள், இம்மாத இறுதிக்குள் 2 கோடி வீடுகளுக்கு வழங்கப்பட்டு விடும் என்றும், அவர் தெரிவித்தார். சமூக வலைதளங்களில் பரவும் செய்திகளின் நம்பகத் தன்மையை வாக்காளர்கள் சரிபார்த்துக் கொள்ளுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக விரைவில் 165 கம்பெனி துணை ராணுவப் படைகள் தமிழகம் வரவிருப்பதாக திரு. சத்யபிரதா சாஹூ தெரிவித்தார். தமிழகத்தில், தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் தொடர்பாக இதுவரை, ஆயிரத்து 403 புகார்கள் பெறப்பட்டதில், 123 புகார்கள் மீது, வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறினார்.

*பிஜேபி ஆர்ப்பாட்டம் (5)*

டெல்லி அரசின் கலால் கொள்கை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள டெல்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் எனக் கோரி பாரதிய ஜனதா கட்சியினர் இன்று டெல்லியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். திரு. கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, ஆம் ஆத்மி கட்சியினரும், ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

டெல்லி அரசின் கலால் கொள்கை தொடர்பான பணச் சலவை வழக்கில் கைது செய்யப்பட்ட, பாரத் ராஷ்ட்ர சமிதி கட்சியின் மூத்த தலைவர் திருமதி. கவிதா-வை அமலாக்கத் துறை அதிகாரிகள் இன்று டெல்லி நீதிமன்றம் ஒன்றில் ஆஜர்படுத்தி, ஏப்ரல் 9ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைத்தனர். செல்வாக்கு மிகுந்த நபரான கவிதாவை வெளியில் விட்டால், சாட்சியங்களை அவர் கலைக்கக் கூடும் என அமலாக்கத் துறையின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் இன்று தொடங்கி உள்ளன. தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 107 தேர்வு மையங்களில், சுமார் 9 லட்சத்து 38 ஆயிரம் மாணவ-மாணவிகளும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், 49 தேர்வு மையங்களில், மொத்தம் 15 ஆயிரத்து 93 மாணவ-மாணவிகளும், தேர்வு எழுதுகின்றனர். முறைகேடுகளைத் தடுக்க பறக்கும் படைகளும், நிலையான கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப் பட்டுள்ளன. 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள், ஏப்ரல் 8ஆம் தேதி வரை நடைபெறும். தேர்வு முடிவுகள், மே 10ஆம் தேதி வெளியாகும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*விழிப்புணர்வு வாசகம் -1 (18)*

புதுச்சேரி தலைமைத் தேர்தல் அலுவலர் அலுவலகமும், புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப் பிரிவும் இணைந்து, புதுச்சேரி மக்களவைத் தொகுதி வாக்காளர்களுக்கான, தேர்தல் விழிப்புணர்வு தமிழ் வாசகம் எழுதுதல் போட்டியை அறிவித்துள்ளன. முறையான வாக்காளர் கல்வி, மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான SVEEP இயக்கத்தின் கீழ் இப்போட்டி நடத்தப்படுகிறது.

வாக்காளர் கடமைகள், 100 சதவிகித வாக்களிப்பு, நேர்மையான தேர்தல், தேர்தல் ஆணையத்தின் மொபைல் செயலிகள், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் தேர்தலின் பங்கு, வாக்குச் சாவடி வசதிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி போன்ற கருத்துக்களை மையப்படுத்தி, தமிழில் விழிப்புணர்வு வாசகங்களை, வாக்காளர்கள் இப்போட்டிக்கு அனுப்பி வைக்கலாம். எதுகை – மோனை - சந்தம் போன்ற அம்சங்களுடன், ஓசை நயத்துடனும், புதியதாகவும், புதுமையானதாகவும் வாசகங்கள் இருக்க வேண்டும்.

வாக்காளர்கள் தங்களின் பெயர், முகவரி, மற்றும் மொபைல் எண்ணுடன், அதிகபட்சம் 5 விழிப்புணர்வு வாசகங்களை, 94 43 30 83 76 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி மாலை 5 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும்

*விழிப்புணர்வு வாசகம் -2 (4)*

வாசகங்களுக்கு, முதல் பரிசாக ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாய், 2ஆம் பரிசாக இருவருக்கு தலா 2 ஆயிரம் ரூபாய், மற்றும் 3ஆம் பரிசாக மூவருக்கு தலா ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் வாசகங்கள், வாக்காளர் விழிப்புணர்வுக்காக அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப் படும்.

*ஏனாம் (7)*

ஏனாமில் சுகாதாரத் துறை சார்பில் இன்று நடைபெற்ற காசநோய் விழிப்புணர்வு பேரணியை காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ராஜசேகர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். சுகாதாரத் துறை ஊழியர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களுடன், செவிலியர் பயிற்சி மாணவர்களும் இதில் பங்கேற்றனர். உலகில், ஆண்டுக்கு 30 லட்சம் பேர் காசநோயால் உயிரிழப்பதும், ஆண்டுதோறும் மார்ச் 24ஆம் தேதி உலக காசநோய் தினம் அனுசரிக்கப் படுவதை ஒட்டி, ஒருவார காலத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

*IPL (6)*

IPL கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில், சென்னை – குஜராத் அணிகள் மோதவுள்ளன. நேற்று இரவு, பெங்களூரு – பஞ்சாப் அணிகளுக்கு இடையே, பெங்களூருவில் நடைபெற்ற போட்டியில், பெங்களூரு அணி, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 49 பந்துகளில் 77 ரன் எடுத்த பெங்களூரு அணியின் விராட் கோலி ஆட்ட நாயகனாக அறிவிக்கப் பட்டார்.

*டென்னிஸ் (6)*

அமெரிக்காவின் ஃப்புளோரிடாவில் நடைபெறும் மியாமி மாஸ்டர்ஸ் ஏடிபி டென்னிஸ் சாம்பியன் பட்டப் போட்டிகளில், இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் மேத்யு எப்டென் இணை, மோனிகாஸ்க் – போலந்து இணையைத் தோற்கடித்து காலிறுதி போட்டிக்குத் தகுதிப் பெற்றுள்ளது. நாளை காலை நடைபெற உள்ள காலிறுதிப் போட்டியில், இந்தியா – ஆஸ்திரேலியா இணை, டச்சு – ஆஸ்திரேலிய இணையுடன் மோதும்.

மை□ *(10)*

இந்தியாவில் வரும் ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில், சராசரியை விட அதிக அளவில், மழைப் பொழிவு இருக்கும் என, ஆசியா – பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் வானிலை மையம் கணிப்பு வெளியிட்டுள்ளது. பருவநிலைக் கூறுகள், எல்-நீனோ விளைவுகளில் இருந்து லா-நீனா நிலைக்கு மெதுவாக மாறக்கூடும் என்பதை கருத்தில் கொண்டு, APEC வானிலை மையத்தின் கணிப்புகள், ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான கால கட்டத்திற்கும், ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான கால கட்டத்திற்கும் தனித்தனியே வெளியிடப் பட்டுள்ளன. இது, இந்தியாவிற்கான இவ்வாண்டின் முதலாவது பருவமழைக் கணிப்பு அறிக்கையாகவும் அமைந்து உள்ளது.

*கப்பல் (12)*

இந்திய கடலோர காவல் படையின் சமுத்ர பஹரேதார் – மாசுபாடு எதிர்ப்புக் கப்பல், வெளிநாட்டுப் பணியின் ஒரு பகுதியாக இன்று பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா விரிகுடா சென்றடைந்துள்ளது. ஆசியான் பிராந்தியத்தில் கடல் மாசுபாடு குறித்த இந்தியாவின் கவலைகளையும், இதைக் கட்டுப் படுத்துவதில் இந்தியாவின் திறன்களையும் வெளிப்படுத்தும் நோக்கத்தில் இதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பிலிப்பைன்ஸைத் தொடர்ந்து, அடுத்த மாதம் 12ஆம் தேதி வரை, வியட்நாம், மற்றும், புரூனை நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. சமுத்ர பஹரேதார் கப்பலில், கடல் மாசுபாட்டை கட்டுப் படுத்துவதற்கான சிறப்பு உபகரணங்களும், கடலின் மேற்பரப்பில் எண்ணெய்ப் படலம் பரவாமல் தடுக்கும் வசதிகளுடன் கூடிய ஹெலிகாப்டரும் இடம் பெற்றுள்ளன.

அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், தற்போது சந்தாதாரர்களுக்கு 8 சதவிகிதத்திற்கு மேல் பிரதிபலன் கிடைப்பதாகவும், சந்தா தொகையின் முதலீடுகள் மீது, கூடுதல் வருவாய் கிடைத்தால், கூடுதல் ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். முதலீடுகள் மீது வருவாய் குறைந்தால், மத்திய அரசு மானியம் வழங்குவதால், இத்திட்டத்தில் குறைந்தபட்ச பலனுக்கு உத்தரவாதம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். திட்டத்தில் இருந்து சந்தாதாரர் விலக்கிக் கொள்ளாத வரை சந்தாவை தானாகவே தொடரும் வகையில், சிறந்த முறையில் இத்திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும் நிதியமைச்சர் கூறியுள்ளார். அடல் ஓய்வூதியத் திட்டம் சரியான முறையில் வடிவமைக்கப் படவில்லை என மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு சமூக ஊடகத்தில் அளித்துள்ள பதிலில் அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

21 மாநிலங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில், அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ள முதல்கட்ட மக்களவைத் தேர்தலுக்கு, இன்றும் வேட்பாளர்கள் பலர் விறுவிறுப்பாக வேட்புமனு தாக்கல் செய்தனர்.

நாட்டில், வெப்ப அலை தீவிரமாகலாம் என எதிர்பார்க்கப் படுவதை ஒட்டி, தேர்தல் ஆணையம், அனைத்து மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது.

வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதை முதல் கடமையாக கருத வேண்டும் என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ கூறியுள்ளார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில், 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் இன்று தொடங்கி உள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / KR / RK